# மிகவும் ஆச்சரியப்படத் தக்கவைகளுக்கான கோரிக்கை

## (12:38-50)

இயேசுவின் அதிகாரம் குறித்து விவாதம் யூதமத தலைவர்களுக்குள்ளே ஒரு அடையாளத்தைக் கேட்கும் அளவுக்கு உச்சமடைந்தது. அவருடைய அற்புதங்களோ அல்லது அவருடைய தர்க்கங்களோ அவர்களை திருப்திபடுத்தவில்லை. அவர் தேவனிடத்திலிருந்துதான் வந்தார் என்பதற்கும் தெய்வீக அதிகாரத்தினாலேயே செயல்படுகிறார் என்பதற்கும் இன்னும் பெரிய ஆதாரத்தைக் கேட்டனர்.

### யூதமதத் தலைவர்களின் வேண்டுகோள் (12:38-42)

***38** அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்.*

***39** அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபச்சாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.*

***40** யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.*

***41** யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்த சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ் சுமத்துவார்கள்.*

***42** தென் தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயாத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவாள்.*

***வசனம் 38.*** *இயேசுவின் அற்புத சுகமளித்தலினாலோ பிசாசுகளைத் துரத்துதலினாலோ யூதமதத் தலைவர்கள் மனநெகிழ்ச்சியடையவில்லை.*

ஒருவேளை அவர் செய்ததைக் குறித்து அக்கரையில்லாமல் கூட இருந்திருக்கலாம் ஏனெனில் அந்நாட்களிலே அப்படிப்பட்ட அதிசயங்களை தாங்களும் செய்ய முடியும் என்பது போல் நடித்து ஜனங்களை எண்ண வைத்து மோசம் போக்கினவர்களும் இருந்தார்கள் (காண்க நடபடிகள் 8:9-13; 13:6-11; 19:13-20). அவர்கள் இயேசுவிடமிருந்து ஒரு **அடையாளத்தைக்** கேட்டார்கள் (*sēmeion*). ஒரு "அடையாளம்" என்பது ஒருவர் தேவனிடத்திலிருந்து தான் அனுப்பப்பட்டவர் என அடையாளம் காணும்படி நடப்பிக்கப்பட்ட அற்புதம், (மாற்கு 16:14-18; யோவான் 1:29-34; 3:2; 20:30, 31). அடையாளங்கள் எச்சரிக்கைக்காகவும் சத்தியத்தை உறுதிப்படுத்தவும் கூட நடப்பிக்கப்பட்டன (நியாயாதிபதிகள் 6:17, 18, 36-40; ஏசாயா 7:10-17; எபிரெயர் 2:1-4). தமது ஊழியக்காலம் முழுவதும், இயேசு எதிர்பார்த்தவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காக அற்புதங்களை நடப்பிக்க மறுத்துவிட்டார். அவருடைய கண்ணோட்டத்தில் அப்படியொரு கண்காட்சியை நடப்பிப்பது தேவனை "சோதிப்பதாகக்" கருதினார் (காண்க 4:5-7; KJV).

கடினமான **பரிசேயர்கள்** மோசேயை பார்வோன் நடத்தியது போலவே இயேசுவை நடத்தினார்கள் (யாத்திராகமம் 4-14); அவர்களுக்குள்ளாக இயேசு ஏற்கனவே செய்திருந்த அற்புத அடையாளங்களை புறந்தள்ளினார்கள். இப்பொழுது, தேவனுடைய பலத்தால் குற்றஞ்சாட்டப்படாத அடையாளத்தை இயேசு செய்யும்படி அவரது ஏற்புடைமையில் செய்ய வேண்டுமென பரிசேயர்கள் தேடினார்கள். பிற வசனப்பகுதிகளில் "வானத்திலிருந்து ஒரு அடையாளத்தை" கேட்டதாகக் குறிப்பிடப்படுகிறது (மாற்கு 8:11; லூக்கா 11:16). ஒருவேளை அவர்கள் வானத்திலிருந்து இறங்கின மன்னாவை ஒத்த அடையாளத்தைக் கேட்டிருக்கலாம் (யாத்திராகமம் 16:1-36), சூரியனை நிலைத்திருக்கச் செய்தது (யோசுவா 10:12-14), அல்லது தேவன் வானத்திலிருந்து அக்கினியை வருவித்தது (1 இராஜாக்கள் 18:30-40). பரிசேயர்கள் கோரியதை இயேசு செய்திருந்தாலும் அவர்கள் இயேசுவை விசுவாசித்திருப்பார்களா என்பது சந்தேகமே. பின்னதாக பவுல் யூதர்களின் இந்த எண்ணத்தில் அவர்கள் அப்படி கேட்ட அடையாளம் குறித்து விமரிசித்தார் (1 கொரிந்தியர் 1:22).

**வசனங்கள் 39, 40.** இயேசு தமது காலத்து ஜனங்களைப் பார்த்து **பொல் லாத விபச்சாரச் சந்ததி** என்றார். அவர்கள் "பொல்லாதவர்களாயிருந்தார்கள்" ஏனெனில் "ஒழுங்கீனமான கேடுபாடுகள்" அவர்களிடம் இருந்தது. அவர்கள் "விபச்சாரச் சந்ததி," எனப்பட்டனர், ஏனெனில் "ஆவிக்குரிய ரீதியில் பேசினால், அவர்கள் தேவனிடத்தில் அவிசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள்." இந்த மொழிநடை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் யேகோவாவின் உடன்படிக்கைகளை உடைத்துப் போட்டனர் என்று விவரிக்கிறது (ஏசாயா 50:1; எரேமியா 3:8; 13:27; 31:32; எசேக்கியேல் 16:32-43; ஓசியா 2:1-20). இதே பதம் அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப்படலாம் (யாக்கோபு 4:4), ஏனெனில் சபை கிறிஸ்துவின் மணவாட்டியாயிருக்கிறதே (எபேசியர் 5:22-33).

இயேசு அவர்களுடைய வேண்டுகோளை நிராகரித்தாலும் அவர்கள் ஒரு **அடையாளத்தை** கேட்டமையால், **தீர்க்கதரிசியாகிய யோனாவின் அடையாளத்தை** அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அனுபவம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம்,

*உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாக இருந்தன.* ***யோனா*** *பெரிய மீனின் வயிற்றில்* ***மூன்று நாட்கள்*** *(பகல்கள்) மற்றும்* ***மூன்று இரவுகள்*** *இருந்தது போலவே (யோனா 1:17), இயேசுவும் அதே கால அளவில்* ***பூமியின் இருதயத்தில்*** *இருப்பார் என்று சொல்லப்பட்டது. யோனா ஜெபம் பண்ணினபோது, தான் "பாதாளத்தின் வயிற்றில்" இருந்ததாக உருவகமாக தானே விவரிக்கிறார் (யோனா 2:2). அதற்கொப்பாக, இயேசு நேரடிப் பொருளில் பூமியில் புதைக்கப்பட்டிருப்பார் (காண்க எபேசியர் 4:9).*

*இந்த வசனப்பகுதியில் அநேக கடினமான புரிந்து கொள்ளுதல் எழும்புகிறது. முதலாவதாக, யோனா "திமிங்கலத்தின் வயிற்றில்" இருந்ததாக* KJV *சொல்லுகிறது. திமிங்கலங்கள் உலகிலேயே மிகப்பெரிய மிருகமாயிருந்தாலும், உயிருள்ள ஒரு மனுஷனை மூன்று நாட்கள் வைத்துக் கொள்ளக் கூடாத அளவுக்கு அதன் வயிறு மிகமிகச் சிறியதாக அவைகளுக்கு இருப்பதாக சர்ச்சைகள் தொடருகின்றன. இந்தப்பதமாகிய kētos, என்பது* NASB *வேதாகமத்தில்* ***பெரிய கடல் விலங்கு*** *என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, அது "விவரிக்க இயலாத ஒரு ஜீவி"[1] என்று குறிப்பிடப்படுகிறது.* KJV *குறிப்பிடுகிறபடி திமிங்கலத்தைத் தான் குறிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு முழு மனிதனை விழுங்கத்தக்கதாக திறமையான மிகப்பெரிய சிருஷ்களெல்லாம் பால் சுறா, கடல் (திமிங்கல) சுறா, வெள்ளைச் சுறா போன்றவைகள் உட்பட குறிப்பிடப்படுகிறது. "கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்ததை ... யோனாவை விழுங்கிப் போடும்படியானதை அடையாளப்படுத்த" (யோனா 1:17) அவசியமானதாகவோ தேவையானதாகவோ இருக்க வில்லை.*

*இரண்டாவது கடினமான நிலையை உண்டாக்குவது யாதெனில் பூமிக்குள் அவர்* ***மூன்று பகலும் மூன்று இரவும்*** *இருப்பது பற்றியது. அவர் சொன்ன இந்தக் கருத்துக்கு பலவிதமான விளக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு விளக்கம் என்னவெனில் இயேசு ஒரு குறிப்பிட்ட வெள்ளிக்கிழமைக்குப் பதிலாக ஒரு வியாழக்கிழமை சிலுவையில் அறையப்பட்டார். பஸ்காவுக்கு முந்தைய வெள்ளிக்கிழமை "சிறப்பு ஓய்வுநாள்" என்று நியமிக்கப்பட்டிருந்தது. எப்படியிருப்பினும், மூன்று பகல் எனும் முழுநாட்களைக் கணக்கிட இயலாது. இந்தப் பிரச்சனையை சமாளிக்க உண்மையில் புதன் கிழமையே சிலுவையில் அறையப்படுதல் நிகழ்ந்தாயிற்று, என வாதிடப்படுகிறது. இந்தப் கண்ணோட்டம் நமது ஆண்டவரை மூன்று இரவுகளும் மூன்று முழு பகல்களுமாக பூமிக்குள் வைக்கிறது. ஆயினும், முழுமை நிறைந்த நாட்களாக கணக்கிடும்போது அநேக பிரச்சனைகளை ஆராய வேண்டும். முக்கியமாக, இந்த வார்த்தை யூதர்களின் "ஆயத்த நாள்" (paraskeuē) - என்று கிறிஸ்து மரித்தநாளை குறிப்பிடுகிறது (மாற்கு 15:42, 43; லூக்கா 23:46, 54; யோவான் 19:14, 30, 33) - இன்றைய கிரேக்க மொழியில் "வெள்ளிக்கிழமையை" மட்டுமே அர்த்தப்படுத்தி பேசுகிறது. உண்மையில் இயேசு குறிப்பிட்ட சரியான மூன்று பகல் மூன்று இரவுகள் என்பது கணக்கிடுவதில் தவறாகவே முடியும், நேரடிப் பொருளில் அணுகும் எந்த முறையும் இந்த அடையாளம் கேள்விக்கு அப்பாற்பட்டது.*

*இந்தப் பிரச்சனைக்கான சரியான விளக்கம் தரவேண்டுமானால், மூன்று பகல்கள் மூன்று இரவுகள் என்பது ஒரு பகலின் எந்த நேரமாயினும் ஒரு இரவின் எந்தப் பகுதிநேரமாயினும் இதில் அடங்கும் என்பதே சிறப்பு. யூத*

*இலக்கியங்கள் இப்படித்தான் நோக்கிப் பார்க்கின்றன, அவை ஒரு நாளின் எந்தப் பகுதியும் அந்த முழு நாளைக் குறிக்கும் என்று பரிசீலிப்பது (ஆதியாகமம் 42:17, 18; 1 சாமுவேல் 30:12, 13; 1 இராஜாக்கள் 20:29; 2 நாளாகமம் 10:5, 12; எஸ்தர் 4:16; 5:1).*[2]

*ஒரு நாளின் எந்தப் பகுதியும் ஒரு இரவின் எந்தப் பகுதியும் முழுப்பகலையும் முழு இரவையும் குறிப்பதாக எடுத்துக் கொண்டாலும் இரண்டு இரவுகள் தான் கணக்கிட முடியும். ஆகையால், சாட்சியங்களின் வெளிச்சத்தில், இந்த வார்த்தை மொழியை மிகவும் துல்லியமாக வலியுறுத்தக் கூடாது. சுவிசேஷ எழுத்தாளர்கள் "மூன்றாம் நாளில்" எனும் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளனர் (16:21; 17:23; 20:19) மற்றும் "மூன்று நாளைக்குப் பின்பு" என்றும் மாற்றி மாற்றி சொல்லப்படுகிறது (27:63, 64; மாற்கு 8:31; 9:31; 10:34).*

*யோனா மீனின் வயிற்றில் இருந்தபோது ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் என்று சொல்லப்படுவதால், யோனா சரீரப்பிரகாரமாக மரித்திருக்கவில்லை, என்பதை வசனம் தெளிவாக்குகிறது (யோனா 2:1). யோனா மரித்திருக்க வேண்டிய அவசியமில்லை ஏனெனில் தமது உயிர்த்தெழுதலை ஒப்பிட்டு இயேசு குறிப்பிடும் நினைவுச் சின்னம் அது. இயேசு இதை எளிமையான வார்த்தைகளில் குறிப்பிட்டு "யோனா இரவும் பகவும் மூன்று நாள்" மீனின் வயிற்றில் இருந்து உயிரோடு வெளியே வந்தது போல இயேசுவும் பூமியின் இருதயத்தில் இருந்து உயிருள்ளவராய் வருவார் என்று சொன்னார்.*

***வசனம் 41.*** *மீனின் வயிற்றுக்குள் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பின்,* ***யோனா நினிவேயில்*** *தன் காலத்திலிருந்த ஜனங்களிலேயே மிகவும் அக்கிரமம் நிறைந்த மக்களுக்கு பிரசங்கம் பண்ணினார் (யோனா 1:2). நினிவே ஒரு புறஜாதியாரின் பட்டணமும், அசீரியாவின் தலைநகரமாயுமிருந்தது. நினிவே பட்டணத்தார் இயேசுவின் நாட்களிலிருந்த பொல்லாத* ***சந்ததியாகிய*** *யூதர்களை எப்படி எழுந்து* ***குற்றஞ்சாட்டக்கூடும்****? இந்த வசனப் பகுதியில் குறிப்பிடப்படுகிற "குற்றஞ்சுமத்துதல்" என்பது "நியாயத்தீர்ப்புக்குரிய அடிப்படையை" அளிப்பதைக் குறிக்கிறது.*[3] *கடைசியாக யோனா நினிவேயிக்குப் போய் தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி பிரசங்கித்தபோது, "இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்று சொன்னார் (யோனா 3:4), நினிவே பட்டணத்து ஜனங்களும் இராஜாவிலிருந்து அடிமை வரை இரட்டு உடுத்தி மனந்திரும்பி சாம்பலில் உட்கார்ந்தார்கள் (3:5-10). இயேசு,* ***யோனாவிலும் பெரியவர்,*** *வந்திருக்கிறார்; என்றார். ஆகிலும் அவருடைய சந்ததி அவரது பிரசங்கத்தால் மனந்திரும்பவில்லை. "பெரியவர்" எனும் வார்த்தை கிரேக்க மொழியில் (pleion), ஒரு நடுநிலை பாலில் சொல்லப்பட்டிருந்தாலும், அது அநேகமாக கிறிஸ்துவைக் குறிப்பிடுவதாக இருந்தது (12:6 ன் விளக்கவுரையைக் காண்க). வஞ்சப்புகழ்ச்சி அணியில் சொன்னால், யோனாவின்* ***பிரசங்கம்*** *அற்புதங்களோடு செய்யப்படவில்லை, ஜனங்கள் அதை விசுவாசித்தார்கள், அதே வேளையில் கிறிஸ்துவின் பிரசங்கம் ஏராளமான அற்புதங்களோடு செய்யப்பட்டது ஆனால் ஜனங்கள் அதை புறம் தள்ளினர்.*

***வசனம் 42.*** *மறுபடியும், இயேசு புறஜாதியை உதாரணம் காட்டி தமது வார்த்தையைக் கேட்டவர்களை உணர்வடையச் செய்தார்,*

***தென் தேசத்து ராஜஸ்திரீ*** *"சேபா நாட்டு ராணியைக்" குறிப்பிடுகிறது 1 இராஜாக்கள் 10. பழங்காலத்து சேபா நாடு தெற்கு அரேபியாவில், எருசலேமுக்கு 1200 மேல் தென்கிழக்கே அமைந்திருந்தது. அவள் அந்த* ***சந்ததி யாரை எப்படிக் குற்றப்படுத்தக் கூடும்?*** *அவள் வெகுதொலைவிலிருந்து பயணப்பட்டு* ***சாலொமோனின் ஞானத்தையும்*** *அவனது இராஜ்யத்தின் மகிமையையும்* ***கேட்டறிய*** *வந்தாள் (1 இராஜாக்கள் 10:1-10; காண்க 4:34), ஆகிலும் இயேசுவின் நாட்களிலிருந்த சந்ததியார்களோ அவர் யார் என உணர்வடைந்து ஏற்றுக் கொள்ளவோ அவரது ஞானத்தை அறிந்து கொள்ளவோ தவறிவிட்டனர். அவரது போதனையைக் கேட்டுக் கீழ்ப்படிய மிக சிறிய முயற்சிகளை மட்டுமே மேற் கொண்டிருந்தனர். மறுபடியும், இயேசு நடுநிலை பாலாகிய pleion, எனும் பதத்தைப் பயன்படுத்தி, அவர்* ***சாலொமோனைக் காட்டிலும் பெரியவர்*** *என்பதை வலியுறுத்தினார் (12:6, 41 க்கான விளக்கவுரையைக் காண்க). இயேசுவின் ஞானம், அவர் மாமிசத்தில் வந்த தேவன், பழங்கால மிகவும் ஞான முதிர்ச்சி பெற்றிருந்தவர்களைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது.*

## அந்த பொல்லாத சந்ததியைக் குறித்து ஒரு உவமை (12:43-45)

***43 அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்:***

***44 நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு,***

***45 திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்த பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.***

***வசனங்கள் 43-45.*** *அசுத்த ஆவிகளைப் பற்றிய இயேசுவின் உவமை சதுசேயர்களுக்கும் பரிசேயர்களுக்கும் பேசப்படுகிறது (12:38). அவர்கள் புறம்பானவைகளை சுத்தம் பண்ணி, ஆனால் தங்கள் உள்ளானவைகளைக் குறித்து அக்கரைப்படுவதில்லை (23:25-28). தங்களை ஆவிக்குரியவர்களாய்க் காட்டிக் கொள்வதில் கடினப்பட்டு உழைத்தார்கள், அதேவேளையில் வாழ்க்கையை மாற்றியமைக்கும் தேவனுடைய பிரமாணத்தின் கோரிக்கைகளை விட்டுவிட்டனர். அவர்கள் "அற்பக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்," ஒற்தலாமிலும், வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள் (23:23).*

*இயேசுவின் எச்சரிக்கையென்னவெனில், வேதபாரகர்களும் பரிசேயர்களும் தங்களுடைய வீடுகளை சுத்தப்படுத்தினாலும் அதை வெறுமையாய் வைப்பார்களானால், அவர்கள் அப்புறப்படுத்தின அசுத்தங்கள் மறுபடியும்*

*திரும்பி வந்து, முன்பு இருந்ததைக் காட்டிலும் மோசமாகும். இயேசு* **ஒருவனிடத்திலிருந்து** *புறப்பட்டுப்போன* **அசுத்த ஆவியை** *பயன்படுத்தி தமது கருத்து விளக்கத்துக்கு உதாரணமாக்கினார். வினைச்சொல்லாகிய விட்டுப்* **புறப்பட்டுப்போன** (*exerchomai*) *என்பது ஒருவனிடத்திலிருந்து துரத்தப்படும் பிசாசின் செயலை அந்த வசனப்பகுதியில் குறிப்பிடுகிறது (17:18; மாற்கு 1:25, 26; 5:8; 7:29; 9:25). இந்த மனுஷனிடத்திலிருந்து புறப்பட்டுப்போன அசுத்த ஆவி ஒரு புதிய வீட்டைத் தேடிப் போயிருந்தது. புதிய ஏற்பாடு காலத்து யூதர்கள், அராபியர்கள், மற்றும் எகிப்தியர்கள் ஆகிய அனைவருமே (வறண்ட)* **தண்ணீர்களற்ற** *இடங்கள் என்பது அசுத்த ஆவிகள் அலைந்து கொண்டிருக்கும் (வனாந்திரமான) இடங்கள் என்று நம்பினார்கள் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 18:2).*[4]

*இயேசுவின் உவமையில் சொல்லப்படும் பிசாசுவுக்கு இளைப்பாற சரியான இடம் கிடையாமல், அது முன்பு இருந்த வீட்டிற்கே திரும்பிப் போயிற்று, அந்த வீடு ஒருவரும்* **குடியேறாமல், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும்** *இருக்கக் கண்டது. அந்த பிசாசு மட்டும் திரும்பி வந்து குடியேறாமல், தன்னைக் காட்டிலும்* **பொல்லாத** *வேறு ஏழு ஆவிகளையும் கூட்டிக் கொண்டு வந்து, அந்த பரிதாபமான மனிதனுடைய சரீரத்தைத் தங்களுடைய நிரந்தர இருப்பிடமாகக் கொண்டன. இயேசு* **அவனுடைய முன்னிலையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும் என்று** *சொன்னார். அந்த வேளையில் இது ஒரு பொதுவான வழக்கச் சொல்லாக இருந்தது (27:64; 2 பேதுரு 2:20). இஸ்ரவேலில் கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள் தங்களுடைய கலகமுண்டாக்கும் குணத்தால் மோசமான நிலைக்குப் போனதாக வரலாறு சொல்லுகிறது. முடிவில், அவர்களின் புறக்கணிப்பு எருசலேமின் அழிவில் போய் அவர்களின் தேவாலயமும் கி.பி. 70ல் அழிக்கப்பட்டது (காண்க 24:1-28).*

## *முடிவுரை: இயேசுவுக்கு உண்மையான உறவு முறை (12:46-50)*

***46இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள்.***

***47அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேச வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான்.***

***48தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,***

***49தம்முடைய கையைத் தம்முடைய சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ என் தாயும் என் சகோதரரும் இவர்களே!***

***50பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.***

*இந்நிகழ்ச்சிக் குறிப்புகள் மாற்கு 3:31-35 மற்றும் லூக்கா 8:19-21ல்*

காணப்படுகிறது. இந்தக் கதையானது சுவிசேஷங்களில் பல இடங்களிலும் இடம் பெற்றிருப்பதால், இயேசுவின் வாழ்க்கை வரலாற்றின் சரியான இடம் பற்றி குறிப்பிட இயலாது. இந்தப்பகுதி அவரைப் புறக்கணிக்கும் சம்பவம் தொடர்ந்து இந்த அதிகாரத்துக்கு முடிவுரையைக் கொடுத்து இயேசுவைச் சூழ்ந்திருந்த சிறப்புக் கூறுகளுடனும் பகைமைகளுடனும் முற்றுப் பெறுகிறது.

**வசனம் 46.** இயேசு **ஜனங்களோடே பேசிக் கொண்டிருக்கையில், அவருடைய தாயாரும்,** அவருடைய சகோதரரும் அவரிடம் பேச வந்தார்கள் ஆனாலும் அவரிடத்தில் செல்லமுடியாமலிருந்தது (லூக்கா 8:19). அவருடைய உலகப்பிரகாரமான தகப்பனாகிய யோசேப்பைக் குறித்து ஒன்றும் சொல்லப்படாததால், அவர் அநேகமாக மரித்திருக்கக் கூடும் என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர் (காண்க யோவான் 19:25-27).

இயேசுவை, தன்னுடைய முதற்பேறான குமாரனைப் பெற்றெடுத்த பிறகு, மரியாள் அநேகக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்: நான்கு குமாரர்கள் - யாக்கோபு, யோசே, சீமோன், யூதா - மற்றும் குறைந்தபட்சம் இரண்டு குமாரத்திகளையாவது பெற்றெடுத்தாள் (13:55, 56). சிலர் இவர்களெல்லாம் யோசேப்பின் மற்றொரு திருமணத்தின் மூலம் பிறந்த, யோசேப்புக்குப் பிறந்த பிள்ளைகளாயிருக்கலாம் அல்லது கிறிஸ்துவின் ஒன்று விட்ட சகோதரன் சகோதரிகளாக இருக்கலாம் என்கின்றனர், ஆகிலும் இந்த வசனப்பகுதியில் போதிக்கப்படும் தெளிவான சத்தியத்தின் கருத்து இதினால் எடுபட்டுபோகும். ஒன்றுவிட்ட சகோதரர்களை உடன் பிறந்த "சகோதரர்களாக" பேசப்படுவதை கிரேக்க வார்த்தை (*adelphos*) தெளிவாக எதிர்க்கிறது. புதிய ஏற்பாட்டின் எந்த இடத்திலும் "ஒன்று விட்ட சகோதரர்களுக்கு" இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. "ஒன்று விட்ட சகோதரர்களுக்கு" கிரேக்க வார்த்தை *anepsios,* எனும் வித்தியாசப்பட்ட பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் மாற்குவிற்கும் பர்னபாவுக்கும் இந்த வார்த்தை (உறவுமுறை) பயன்படுத்தப்பட்டுள்ளது (கொலோசெயர் 4:10).

இயேசுவின் குடும்பத்தார் ஏன் **அவரிடத்தில் பேசவந்தார்கள்** என்று சரியாகத் தெரியவில்லை. ஆயினும், இந்நிகழ்ச்சிக்குச் சற்று முன்பாகத்தான் "அவருடைய இனத்தார் ... 'அவர் மதிமயங்கியிருக்கிறார்' என்று சொல்லி, 'அவரைப் பிடித்துக் கொள்ளும்படி' அவரிடத்தில் வந்தார்கள்" என்று மாற்கு குறிப்பிட்டார் (மாற்கு 3:21). ஆகையால், அநேகமாக, அவர்கள் அவரிடத்தில் வந்து அவர் தமது பிரசங்கத்தை விட்டு விட்டு தங்களோடு வரும்படி அவரைச் சம்மதிக்கச் செய்யும்படி வந்திருக்கலாம். அவருடைய சகோதரரும் அவரை விசுவாசிக்கவில்லை என்று யோவான் குறிப்பிட்டார் (யோவான் 7:5). எப்படியிருப்பினும், அநேகமாக உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அவர்களும் விசுவாசிகளாகியிருக்கிறார்கள் (நடபடிகள் 1:14; 1 கொரிந்தியர் 9:5; 15:7). யாக்கோபு, மற்றும் யூதா ஆகிய இருவரும், அவர்களுடைய பெயர்களில் குறிப்பிடப்படும் புத்தகங்களை எழுதினார்கள்.

**வசனம் 47.** அவர்கள் இயேசுவிடம் போகமுடியாத படியால், குடும்பத்தார் அநேகமாக செய்தியை ஒருவனிடம் சொல்லியனுப்பி, அவர்கள் **வெளியிலே நின்று கொண்டிருப்பதாகவும்** அவரிடத்தில் பேச வேண்டும் என்றும் சொல்லச் சொன்னார்கள். அவர்கள் அநேகமாக அவர் செய்து கொண்டிருப்பதை விட்டுவிட்டு உடனே அவர்களிடத்தில் வருவார்

*என்றும் எதிர்பார்த்திருக்கக் கூடும், ஆனால் அவர் வரவில்லை. சில கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் இந்த வசனம் சேர்க்கப்படவில்லை (காண்க RSV). இந்த விடுபடுதல் அந்தக் கையெழுத்துப் பிரதிகளில் ஏற்பட்டதால் வேதபாரகருடைய கண்களிலே அது lalēsai, "பேசும்படி," என்று வசனம் 46ன் கடைசியில் வரும் வார்த்தை விடுபட்டு, அதே வார்த்தை வந்துள்ள வசனம் 47ன் கடைசியில் வரும் வார்த்தையை எடுத்துக் கொண்டிருக்கலாம்.*[5]

***வசனங்கள் 48-50.*** *கர்த்தர் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக கேட்டது,* ***யார் என்னுடைய தாய், யார் என்னுடைய சகோதரர்?*** *என்றார். இயேசுவிடமிருந்து வந்த இந்தப் பிரதிபலிப்பு தமது தாய்க்கோ சகோதரர்களுக்கு அவர்களின் வேண்டுகோளை அவமதித்தாகக் காணவில்லை. இயேசு தமது தாயாருக்கு மிகுந்த பயத்துடன் கூடிய மதிப்பை வைத்திருந்தார் (லூக்கா 2:51; யோவான் 2:3-11; 19:25-27; காண்க மத்தேயு 15:3-6), மேலும் அடிக்கடி அதை வெளிப்படுத்தவும் செய்தார். எப்படியிருப்பினும், இந்த நிகழ்ச்சியில், அவருடைய தெய்வீகத்திற்கும் மனுஷீகத்துக்கும் இடையே ஒரு பெரிய மோதலை உண்டாக்கியது, ஆகிலும் அவரது கடமை தெய்வீகக் காரியத்திற்கே முதன்மைத்துவம் கொடுக்கப்பட வேண்டியது என உடனடியாகக் காட்டப்பட்டது.*

***இயேசு*** *தமது கையை* ***சீஷர்களிடமாய்ச் சுட்டிக் காட்டி*** *அவர்களே தமது உண்மையான குடும்பத்தார் என்று அறிவித்தார், பிறகு அவர் பரலோகத்திலிருக்கிற, (அவருடைய)* ***பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே*** *(காண்க 7:21) அவருடைய குடும்பத்தாருக்குரிய உறவுமுறையை உடையவன் என்றார்:* ***என் சகோதரனும் என் சகோதரியும் என் தாயுமாயிருக்கிறார்கள்*** *- "தகப்பன்" எனும் பதம் இந்த வரிசையில் விடப்பட்டுள்ளது ஏனெனில் அந்தப்பட்டம் தேவனுக்கு மட்டுமே உரியது (23:9; எபேசியர் 4:4-6). "சகோதரியும்" "தாயும்" என்று குறிப்பிடப்பட்டது, அவருடைய காலத்தில் இருந்த மற்ற அநேகரைப் போலில்லாமல் ஸ்திரீகளையும் தம்முடைய சீஷர்களாக அழைத்தார் என்பதையும் காட்டுகிறது. ஸ்திரீகள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்தார்கள் (லூக்கா 8:1-3), மற்றும் அவர், அவர்களுக்குப் போதிக்கத் தயங்கவில்லை (லூக்கா 10:38-42; யோவான் 4:7-30).*[6]

*இந்த வசனங்களிலிருந்து இரண்டு முக்கிய உண்மைகளை நாம் பெறலாம். முதலாவதாக, தெய்வத்தின் நியமமாக தாம் செய்து கொண்டிருந்த ஊழியத்தை பூமிக்குரிய குடும்பத்தார் திசைமாறிப் போகச் செய்துவிட அனுமதிக்கவில்லை (யோவான் 2:4; 7:6ஐக் காண்க). இரண்டாவதாக ஒருவருடைய மாம்ச ரீதியிலான சொந்தக் குடும்பத்தைக் காட்டிலும் ஆவிக்குரிய பந்தமே நெருக்கமானது (காண்க 8:21, 22; 10:34-37).*

### ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## எல்லாவற்றிற்கும் மேலான மிகப்பெரிய அடையாளம் (12:39, 40)

*எல்லா அடையாளங்களிலும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே*

*மிகப்பெரிய அடையாளமாகும், ஏனெனில் அதுதான் அவரை தேவனுடைய குமாரன் என்று நிரூபித்தது. இயேசு "தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:4). கிறிஸ்தவ விசுவாசம் உயிர்த்தெழுதலின் உண்மையில்தான் தொங்கிக் கொண்டுள்ளது; தேவனுடைய வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டுவீற்றிருக்கும் உயிர்த்தெழுந்த இரட்சகரையே நாம் சேவிக்கிறோம்! இயேசு கல்லறையை விட்டு எழுந்து வந்தார் என்கிற உண்மை அவரது வருகையின் போது நாமும் சரீரத்திலே உயிர்த்தெழுவோம் என்கிற உறுதியளிக்கிறது (1 கொரிந்தியர் 15:20-28, 50-58).*

டேவிட் ஸ்டீவர்ட்

## யோனாவின் வரலாற்றுத் தத்துவத்துவம் *(12:40)*

*கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மார்க்க சுதந்திரவாதிகள் யோனாவின் அனுபவ வரலாற்றை குறைத்து மதிப்பிடுகின்றனர். நடந்த கதையை அவர்கள் ஒரு கட்டுக்கதையாகவோ, உவமை அடையாளமாகவோ, ஞானார்த்தமாகவோ காணுகின்றனர். இருப்பினும், இந்த அணுகுமுறைகள், யோனாவின் புத்தகத்தை சரியாக வாசிப்பதை பிரதிநிதிப்படுத்துவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, மத்தேயு 12:40ல் இயேசு குறிப்பிடும் வாக்கியத்தை கண்டு கொள்வதில்லை, யோனாவின் வரலாற்று உண்மையை அவர் தமது சொந்த உயிர்த்தெழுதலுக்குப் பயன்படுத்தினார். யோனா உண்மையிலேயே கடல் விலங்குகளால் விழுங்கப்படவில்லையெனில், அது கர்த்தரை பொய்யராகக் காட்டுகிறது. மேலும், அது அவருடைய உயிர்த்தெழுதலின் நம்பகத் தன்மையை பெலவீனப்படுத்திவிடும். உயிர்த்தெழுதல் இல்லையெனில், கிறிஸ்தவனுக்கு நிற்பதற்கான கால் இல்லாதது போன்றது. பவுல், "கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:17).*

டேவிட் ஸ்டீவர்ட்

## சாத்தான் வீடு திரும்ப விரும்புகிறான் *(12:43-45)*

*இயேசுவின் நாட்களில் ஜனங்கள் பிசாசுகளைக் குறித்து நன்றாகவே அறிந்திருந்தனர். 12:43-45ல் அவர் ஒரு உவமையைச் சொல்லியிருந்தார், அதில் வெறுமையான வாழ்வில் வெறுமையான வீடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. சாத்தான் அந்த சூழ்நிலைகளின் கீழ் பணிபுரிய விரும்புகிறேன். அவன் வேதாமக வரலாற்றில் ஒரு வஞ்சிக்கிறவனாக, "மிகவும் நய வஞ்சகனாக, எல்லா மிருகங்களிலும் மிகவும் மோசமாக [தந்திரமுள்ளவனாக; ASV] நுழைகிறான்" (ஆதியாகமம் 3:1). அவனுடைய மிகப்பெரிய வஞ்சகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமலும் வினயமாகத் தன்னைக் கவனிக்காமலுமிருக்கும் வகையில் மனிதர்களின் காரியங்களையெல்லாம் இவ்வளவு காலமாக பாதிக்கக் கூடியவனாக திறமையாய் செயல்பட்டுள்ளான்.*

இந்த உவமையில் இயேசு ஒரு சுருக்கமான விளக்கவுரையை சாத்தானின் குணாதிசயத்தைக் குறித்து விளக்கம் கொடுத்தார். சாத்தான் உண்மையில் இருப்பவன் மட்டுமல்ல, பிடிவாதமாய் இருப்பவனும் கூட. அவன் வீடுதிரும்ப விரும்புகிறான்; அவன் ஒரு (மனிதனின் வாழ்வை) வெறுமையான வீட்டை பிடித்து உட்கார்ந்து கொள்ள விரும்புகிறான்.

## தீமையை நன்மையால் மாற்றுதல்
## *(12:43-45)*

யாக்கோபு, "சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்," என்று எழுதினார் (யாக்கோபு 4:7). தற்காலிகமாக அவன் ஒருவரை விட்டு விலகி ஓடிப் போகலாம், ஆனாலும் அவர் எங்கே இருக்கிறார் என்று அவன் மறந்துவிடமாட்டான்! தன்னை ஒரு காலத்தில் இயேசுவின் நிமித்தம் மறுதலித்ததினாலேயே ஒரு மனிதனை சோதிப்பதிலிருந்து பின் வாங்க மாட்டான். நன்மை சாதகமான காரியங்களை நடப்பிக்க ஏதுவான இடத்தை தீமையை விலக்குவதன் மூலமே சுத்தப்படுத்த முடியும். உவமையில் குறிப்பிடப்படுகிற பிசாசு திரும்பி வந்து தான் முன் குடியிருந்த வீட்டை பார்த்தபோது அது வெறுமையாயிருக்கக் கண்டு, மேலும் ஏழு பிசாசுகளைக் கூட்டிக்கொண்டு வந்து அதிலே குடியேறினான்.

எதுவும் அதிக நாட்கள் வெறுமையாக இருக்க இயலாது. தீமை அகற்றப்படுமானால் உடனடியாக அது சாத்தியமான நன்மையால் நிரப்பப்பட வேண்டும். தேவ காரியத்தில் செயலூக்கத்துடன் ஒருவர் ஒப்புக் கொடுத்தலில் ஈடுபடும்போது தனது நோக்கமாகிய தீமையை அப்புறப்படுத்த ஏதுவாகும்.

## "பிசாசுகளை" துரத்துவது எப்படி
## *(12:43-45)*

இன்று பிசாசுகள் ஜனங்களின் சரீரங்களில் குடியிருப்பதில்லை, ஆனால் சாத்தான் இன்னமும் தனது வல்லமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி நமக்கு எதிராக தனது செல்வாக்கை செயல்படுத்துகிறான். அவனது செயல்கள் அநேக வசனப்பகுதிகளில் பிரதிபலிக்கிறது (லூக்கா 8:12; 2 கொரிந்தியர் 2:11; எபேசியர் 6:11-16; 1 தெசலோனிக்கேயர் 2:18; 1 தீமோத்தேயு 3:6, 7; 2 தீமோத்தேயு 2:26). சாத்தான் எதிர்க்கப்பட வேண்டும் (யாக்கோபு 4:7; காண்க மத்தேயு 16:21-23; லூக்கா 22:31, 32; எபேசியர் 4:27; 1 பேதுரு 5:8).

*இந்த "பிசாசுகள்" யார்?* (1) மோசம் போக்குபவர்கள் பிசாசுகள், (2) உற்சாகத்தை இழக்கச் செய்யும் பிசாசு, (3) உணர்வடைய விடாத பிசாசு, (4) தாமதப்பட வைக்கும் பிசாசு.

*நாம் எப்படி அவைகளைத் "துரத்தக் கூடும்"?* (1) கர்த்தரிடமாய் நெருங்கியிருப்பதன் மூலம், (2) தேவனுக்காக மும்முரமாய் செயலாற்றுவதன் மூலம், (3) மற்றும் ஆவியின் பட்டமாகிய, தேவனுடைய வார்த்தையை வல்லமையாய்க் கையாளுவதன் மூலமே.

நமது வாழ்வில் நாம் செய்யக்கூடிய மிக மோசமான தவறு என்னவெனில் நமது வாழ்வை கொஞ்சம் கொஞ்சமாக (படிப்படியாக) ஆக்கிரமிக்கும்

*தீமையைக் குறித்து எதுவும் செய்யாமலிருப்பது. சாத்தான் வெற்றியடைய அவனுடைய தேவையெல்லாம் நல்ல மனிதர்கள் ஒன்றும் செய்யாமல் அவனை எதிர்த்து செயல்படாமல் இருக்கச் செய்வதுதான். நாம் தேவனிடத்திற்கு ஓடுவோமானால், சாத்தான் நம்மை விட்டு ஓடிப்போவான்.*

## *மரியாளைத் தொழுதல் (12:46-50)*

*சில மதக் கூட்டங்களால் மரியாள் மேல் குவிக்கப்படும் மரியாதை வணக்கமானது அவசியமில்லாததும் தேவ தூஷணமானதுமாய் இருக்கிறது. கன்னிகை எனும் கருத்து, மரியாள் "தேவனுக்குத் தாயாக இருப்பதால்," "அவளே தெய்வமாகவும் அற்புதப் பிறப்பால் உலகத்தில் பிரவேசித்தார்" என்று அதிகார அடிப்படை இல்லாமல் போதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கள்ள உபதேச நம்பிக்கையின் அடிப்படையில், மரியாளுக்கு இயற்கைக்கு மேற்பட்ட வல்லமை இருப்பதாகக் கருதி ஜனங்கள் தொழுது கொள்ள வருகிறார்கள். இந்த தேவையற்ற தலையீடு இயேசு கிறிஸ்துவின் 12:46-50ல் குறிப்பிடப்படும் ஊழியம் மரியாள் வேறு யாரைக் காட்டிலும் உயர்ந்தவளல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது.*

## தேவனுடைய குடும்பம் *(12:46-50)*

*தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாயிருப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம். தேவன் நமக்கு தகப்பனாகவும் இயேசு கிறிஸ்து நமது மூத்த சகோதரருமாயிருக்கிறார் (ரோமர் 8:14-16; எபிரெயர் 2:10-18). நமக்கு ஊக்கமளித்து, ஆதரவு காட்டி போதிக்கிற சகோதர சகோதரிகள் இருக்கின்றனர். நாம் நமது வெற்றிகளையும் தோல்விகளையும் பகிர்ந்து கொள்ளவும், ஒன்றாகச் சேர்ந்து சந்தோஷப்படவும் அழவும் கூடும் (ரோமர் 12:15). கடினமான நேரங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கக் கூடும், அது ஆவிக்குரியதாயிருந்தாலும் மாம்சப்பிரகாரமாயிருந்தாலும் அப்படிச் செய்யலாம் (கலாத்தியர் 6:1, 2, 10). தேவனுடைய குடும்பம் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியது, சரீரப் பிரகாரமான குடும்பம் இல்லாதோருக்கும் விசுவாசத்தை பகிர்ந்து கொள்ளாத குடும்பத்தையுடையோருக்கும் அதுவே புகலிடம்.*

*டேவிட் ஸ்டீவர்ட்*

---

*குறிப்புகள்*

[1]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 178. [2]Talmud *Pesahim* 4a; *Nazir* 5b. [3]Lewis, 179. [4]*காண்க* Tobit 8:3; Baruch 4:35. [5]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 26-27. [6]*எதிரிடையாக, ரபீமார்கள் மனுஷர்களை எச்சரித்து, "ஸ்திரீகளிடம் அதிகமாகப்பேசாதே" என்றனர், மேலும் சொல்லும் போது, "ஒரு ஆண் ஸ்திரீகளிடத்தில் பேசும் வரை (1) அது அவனுக்கே உபத்திரவமாக மாறுகிறது, (2) நேரத்தை வீணடிக்கிறது. அந்த நேரத்தில் தோராவை (முதல் ஐந்து புத்தகங்களை) வாசிக்கலாம், மற்றும் (3) முடிவில் நரகத்தின் சுதந்திரவாளியாக்குகிறது"* (Mishnah *Aboth* 1.5).